**செய்தி வெளியீடு எண் :** 148 **நாள் :** 23.01.2023

**பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு–78க்குட்பட்ட சச்சிதானந்தம் தெருவில் ரூ.6.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாய நலக்கூடமான அறிஞர் அண்ணா மாளிகையை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (23.01.2023) திறந்து வைத்தார்.**

இன்று (23.01.2023) மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு–78க்குட்பட்ட சச்சிதானந்தம் தெருவில் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.இரவிச்சந்திரன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மூலதன நிதியின் கீழ் ரூ.6.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாய நலக்கூடமான அறிஞர் அண்ணா மாளிகையை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 9 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. இ. பரந்தாமன் அவர்கள், திரு.அ.வெற்றி அழகன் அவர்கள், திரு.ஜோசப் சாமுவேல் அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையாளர் எஸ். ஷேக் அப்துல் ரஹ்மான், இ.ஆ.ப., அவர்கள், பொது சுகாதாரக் குழுத் தலைவர் டாக்டர் கோ.சாந்தகுமாரி அவர்கள், நியமனக் குழு உறுப்பினர் திரு. சொ. வேலு அவர்கள், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in